# உயர் கல்வித் துறை

## மானியக் கோரிக்கை எண் - 20

## அறிவிப்புகள்
## 2021-2022

**முனைவர் க. பொன்முடி**
உயர் கல்வித்துறை அமைச்சர்

## 1. புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குதல்

## (Opening of New Government Arts and Science Colleges)

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான உயர்கல்வி வழங்குவதற்கும், மாணவர் சேர்க்கை விகிதாச்சாரத்தை அதிகப்படுத்துவதற்கும், 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்காணும் இடங்களில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படும்:

- விருதுநகர் மாவட்டம் – திருச்சுழி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோயிலூர், ஈரோடு மாவட்டம் – தாளவாடி, திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம், திருநெல்வேலி மாவட்டம் – மானூர், திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், தருமபுரி மாவட்டம் – ஏரியூர், புதுக்கோட்டை மாவட்டம் – ஆலங்குடி மற்றும் வேலூர் மாவட்டம் – சேர்க்காடு ஆகிய இடங்களில் புதிய இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும்,
- திருவாரூர் மாவட்டம் – கூத்தாநல்லூரில் புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் தொடங்கப்படும்.

## 2. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள 17 மின்னணு நூலகங்களை மேம்படுத்துதல்
## (Upgradation of Existing 17 Digital Libraries)

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடங்கப்பட்ட 17 மின்னணு நூலகங்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்பாட்டில் உள்ளன.

இந்நூலகங்களை மேம்படுத்தவும் உரிமங்களைப் புதுப்பிக்கவும் ஒரு கல்லூரிக்கு ரூ.5 இலட்சம் வீதம் 17 கல்லூரிகளுக்கு ரூ.85 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.



## 3. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதியதாக 10 மின்னணு நூலகங்களை அமைத்தல்
## (Setting up of 10 New Digital Libraries)

மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள், தங்களுக்குத் தேவைப்படும் தகவல்களையும், எல்லையற்ற அறிவுசார் வளங்களையும், உடனுக்குடன் எளிதாகப் பெறுவதற்கு, மின்னணு நூலகங்கள் பாலமாக அமைந்துள்ளன. எனவே, சென்னை – வியாசர்பாடி, தருமபுரி, பரமக்குடி, அரியலூர், முசிறி, விழுப்புரம், சிவகங்கை, கும்பகோணம், திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மின்னணு நூலகங்கள் ரூ.1 கோடி செலவில் அமைக்கப்படும்.

## 4. புதியதாக தொடங்கப்பட்ட 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்

## (Construction of New Building for Newly Opened four Government Arts and Science Colleges)

அண்மையில் தொடங்கப்பட்ட 13 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தற்காலிகக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. முதற்கட்டமாக, சங்கரன்கோவில், ஜம்புகுளம், வானூர் மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஒரு கல்லூரிக்கு ரூ.11.33 கோடி வீதம் மொத்தம் ரூ.45.32 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.



## 5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆராய்ச்சிப் பாடப் பிரிவுகள் தொடங்குதல்

## (Starting Ph.D Research Programs in Government Arts and Science Colleges)

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் நலன்கருதி, முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்வதற்கு செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், கும்பகோணம், கோவில்பட்டி, சென்னை – நந்தனம் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிதாக ஆராய்ச்சிப் பாடப் பிரிவுகள் தொடங்கப்படும்.

## 6. பாடப் புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல்
## (Translation of Text Books in Tamil)

தமிழ் வழியில் பயிலும் மாணாக்கர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் ஒருங்கிணைந்து வெவ்வேறு பாடப்பிரிவுகளில், 100 பாடப் புத்தகங்கள் ரூ. 2 கோடி செலவில் தமிழில் மொழிபெயர்க்கப்படும்.



## 7. பட்டயப் படிப்புகளை தமிழ் வழியில் அறிமுகப்படுத்துதல்
## (Introduction of Diploma Courses in Tamil Medium)

தமிழ்வழியில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு, அரசுப் பணிகளில் 20 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. பட்டயப் படிப்பில் பயிற்றுமொழியாக ஆங்கிலம் மட்டுமே இதுவரை இருந்து வருகிறது. முதற்கட்டமாக, அடுத்த கல்வியாண்டில், அமைப்பியல் (Civil Engineering) மற்றும் இயந்திரவியல் (Mechanical Engineering) பட்டயப் படிப்புகள் தமிழ் வழியில் தொடங்கப்படும். படிப்படியாக இதர பட்டயப் படிப்புகளும் தமிழ் வழியில் தொடங்கப்படும்.

## 8. மகளிருக்கான, பட்டயம் மற்றும் குறுகியகால சான்றிதழ் படிப்புகள் அறிமுகப்படுத்துதல் (Introduction of Women-Friendly Diploma and Short Term Certificate Courses)

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnic Colleges) தற்சமயம் மாணாக்கியர் சேர்க்கை விகிதம் குறைவாக உள்ளது. மகளிரின் சேர்க்கை மற்றும் வேலைவாய்ப்பை உயர்த்துவதற்காக, அக வனப்பியல் (Interior Decoration), அலுவலக மேலாண்மை மற்றும் கணினிப் பயன்பாடுகள் (Office Management and Computer Applications), இணையவலை வடிவமைப்பு (Web Designing), இயந்திரவிய கணினி கொண்டு வடிவமைத்தல் (CAD), உயிர் மருத்துவ மின்னணுவியல் (Bio-Medical Electronics) மற்றும் இதயத் துடிப்பு பதிவி (ECG) தொழில்நுட்பம் ஆகிய ஆறு பாடப்பிரிவுகள் தொடங்கப்படும்.



## 9. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு அயல்நாட்டு மொழிகள் கற்பித்தல் (Teaching Foreign Languages to Final Year Students of Government and Government – Aided Engineering Colleges)

நமது மாணாக்கர்கள் அயல்நாடுகளில் ஆராய்ச்சி மற்றும் வேலை வாய்ப்பினை அதிகளவில் பெறுவதற்காக, அயல்நாட்டு மொழிகளைக் கற்றல் கூடுதல் நன்மை பயக்கும் என்பதால், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியுடன், பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு ஜெர்மானிய, ஜப்பானிய, சீன, ரஷ்ய, பிரஞ்சு ஆகிய அயல்நாட்டு மொழிகள் கற்பிக்கப்படும்.

## 10. ஈரோடு சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரியினை அரசுப் பொறியியல் கல்லூரியாக மாற்றுதல் (Conversion of Institute of Road and Transport Technology (IRTT), Erode into Government Engineering College, Erode)

மாநில போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு, அக்கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் ஈரோடு, சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரி (Institute of Road and Transport Technology, Erode) இக்கல்வியாண்டு முதல் அரசுப் பொறியியல் கல்லூரியாக மாற்றப்பட்டு மாணாக்கர் சேர்க்கையில் 35% இடங்கள் மாநிலப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கென தொடர்ந்து ஒதுக்கீடு செய்யப்படும்.



## 11. பொறியியல் பட்டதாரி மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் மேற்படிப்புக்கான போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி வழங்குதல் (Providing Intensive Coaching for Competitive Examinations to Engineering Graduates)

பொறியியல் பட்டதாரிகள், பட்ட மேற்படிப்பினை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிலவும், வேலை வாய்ப்பினைப் பெறும் எண்ணிக்கையை உயர்த்தவும், போட்டித் தேர்வுகளான IES, GATE, CAT, GMAT, GRE, IELTS, TOEFL போன்றவைகளுக்கு சிறப்புப் பயிற்சி வழங்கப்படும்.

## 12. தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் தொழில் முனைவு மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் (Memorandum of Understanding (MoU) between Directorate of Technical Education and Entrepreneurship Development and Innovation Institute (EDII))

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், மாணவர்களைத் தொழில் முனைவோர்களாக ஊக்குவிப்பதற்கும், உரிய பயிற்சிகளைப் பெறுவதற்கும், தொழில்முனைவு மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் உதவியுடன், 5 மண்டலங்களில் பயிற்சி மையம் நிறுவப்படும். இம்மையங்கள் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் மேற்கூறிய பயிற்சிகள் வழங்கப்படும்.



## 13. தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், கல்லூரிக் கல்வி இயக்ககம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் (Memorandum of Understanding (MoU) between Directorate of Technical Education, Collegiate Education and Tamil Nadu Skill Development Corporation)

மாணாக்கர்களின் வேலைவாய்ப்புத் திறன்களை மேம்படுத்துவதற்காக கூடுதல் பாடங்கள் (add–on courses) பயிற்றுவிக்க தொழில்நுட்பக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககங்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும்.

## 14. தமிழகத்தில் 5 மண்டலங்களில் "செய்கலைஞர் ஆய்வுக் கூடம்" நிறுவுதல் (Establishment of Fab Lab / Maker Space in 5 Regions)

ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களின் படைப்பாற்றல் மற்றும் தனித் திறன்களை மேம்படுத்த 5 மண்டலங்களில் செய்கலைஞர் ஆய்வுக் கூடம் (Fab Lab / Makers Space) நிறுவப்படும்.



## 15. பி.காம். பட்டப்படிப்பில் நேரடி இரண்டாம் ஆண்டுச் சேர்க்கை (Lateral Entry to B.Com Courses)

பலவகை தொழில்நுட்பப் பட்டயப் படிப்புகளான, வணிகவியல் பயிற்சி பட்டயப் படிப்பு (Diploma in Commercial Practice), வணிகவியல் பயிற்சி மற்றும் கணினிப் பயன்பாடுகள் பட்டயப் படிப்பு (Diploma in Commercial and Computer Practice) பயின்ற மாணாக்கர்கள், தமிழகத்தின் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், நேரடியாக இரண்டாம் ஆண்டில் பி.காம். படிப்பில் சேர்ந்து பயில வழிவகை செய்யப்படும்.

## 16. தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கும், மும்பை, இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT – Bombay) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்
## (Memorandum of Understanding between Directorate of Technical Education and IIT – Bombay)

மும்பை, இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் (IIT–Bombay) இணைந்து தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் நிகழ்நிலைப் பாடங்கள் 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும்.



## 17. ரூசா (RUSA) நிதி உதவியுடன் "வாராந்திர நிகழ்நிலை பயிலரங்கம்" நடத்துதல்
## (Conducting Weekly Online Workshops (WOW) through RUSA)

தேசிய உயர்கல்வித் திட்டம் (RUSA) நிதி உதவியுடன், தமிழகத்தில் உள்ள 150 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொழில் முனைவு குறித்து நிகழ்நிலை பயிலரங்கங்கள் நடத்தப்படும்.

## 18. ரூசா (RUSA) நிதி உதவியுடன் தொழில்சார் திறன் பயிற்சியளித்தல்

(Vocational Training to the Students of Higher Education through RUSA)

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு தொழில்சார் திறன் பயிற்சி ரூ.3.30 கோடி செலவில் அளிக்கப்படும்.



## 19. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்திற்கான 4 புதிய மண்டல மையங்கள் நிறுவுதல்

(Establishment of 4 New Regional Centres for Tamil Nadu Open University)

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தற்போது 8 மண்டல மையங்கள் வழியாக கல்விச் சேவை வழங்கி வருகிறது. மேலும், கூடுதலாக 4 புதிய மண்டல மையங்கள் ரூ.1 கோடி செலவில் சேலம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் அமைக்கப்படும்.

## 20. மாவட்ட மைய நூலகங்களுக்குப் பாட நூல்களை வழங்குதல்

**(Supply of Learning materials to District Central Libraries)**

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் சார்பில், கற்போர் நலனுக்காகவும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையிலும் 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு தலா 750 பாடநூல்கள், ரூபாய் ஒரு கோடி செலவில் வழங்கப்படும்.



## 21. பொறியியல் கல்லூரிகளில் முதுநிலை பட்டப் படிப்பு பயிலும் உதவித் தொகை பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை 1200 ஆக உயர்த்துதல்

**(Increasing the number of students availing Post Graduate Assistantship in Engineering Colleges to 1200)**

தமிழகத்தில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் அண்ணா பல்கலைக்கழகம் நுழைவுத் தேர்வு மூலம் சேர்க்கை பெற்று முதுநிலை பட்டப் படிப்பு பயிலும் 600 மாணாக்கர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த கல்வியாண்டு முதல் இம்மாணாக்கர்கள் எண்ணிக்கை 1200 ஆக அதிகரிக்கப்படும்.

## 22. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்காக புதிய நுண்படச்சுருள் பாதுகாப்புப் பெட்டகம் அமைத்தல்

## (Construction of Microfilm Repository for Tamil Nadu Archives)

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 300 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ஆவணங்களிலிருந்து உருவாக்கப்பட்ட 31,000 நுண்படச்சுருள்களை நீண்ட காலத்திற்குப் பாதுகாக்கும் பொருட்டு, இயற்கையிலேயே குளிர்ந்த தட்பவெப்ப நிலையுள்ள நீலகிரி மாவட்டத்தில், 5000 சதுர அடி பரப்பில் நுண்படச்சுருள் பாதுகாப்புப் பெட்டகம் உருவாக்கப்படும்.



## 23. கோவையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் மாணாக்கியர் விடுதி கட்டடம் கட்டுதல்

## (Construction of Women's Hostel Building in Anna University Regional Campus, Coimbatore)

கோவையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் 660 மாணவ, மாணவியர் இளநிலை மற்றும் முதுநிலை பாடப் பிரிவுகளில் பயின்று வருகின்றனர். இம்மாணாக்கியர் நலன் கருதி ரூ.14.00 கோடி செலவில் புதிய மாணாக்கியர் விடுதி கட்டப்படும்.

## 24. மதுரையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் மாணவர் விடுதி கட்டடம் கட்டுதல்
## (Construction of Men's Hostel Building in Anna University Regional Campus, Madurai)

மதுரையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் 800 மாணாக்கர்கள் இளநிலை மற்றும் முதுநிலை பாடப் பிரிவுகளில் பயின்று வருகின்றனர். இம்மாணவர்களின் நலன் கருதி ரூ.15.00 கோடி செலவில் புதிய மாணவர் விடுதி கட்டப்படும்



## 25. உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டம் சீரமைத்தல்
## (Revision of Curricula of all Educational Institutions coming under Higher Education Department)

நவீன தேவைகளுக்கேற்ப பாடத்திட்டங்களை சீரமைப்பது கல்வி வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது. மாணாக்கர்களின் அறிவு, திறன், கற்றல் மற்றும் கற்பித்தல் முறைகளை மேம்படுத்தவும், போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்தவும், தொழிற்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டங்கள் திருத்தியமைக்கப்படும்.